Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## மாவின் விலை ரூ. 8. 50 ஆக குறைப்பு மண்ணெய் 23 ரூபாவாக நிர்ணயம்

இன்று முதல் கோதுமை மா கிலோ 8ரூபா 50 சத ாக குடாநாட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுமென செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது. இதற்கு அமைவாக அரசாங்கத்தின் மொத்த விற்பனை விலையான கிலோ ஒன்றுக்கு ஏழு ரூபா என்ற அடிப்படையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புனர்வாழ்வுப் பகுதி மாவினை விநியோகிக்க உள்ளது. மேலும் மாகோ ப்பலிலிருந்து இறக்கப்பட்ட மண்ணெண்ணெய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஒரு குடும்ப (4-ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 05 21-09-94 புதன் கிழமை ஓசை 215

# சிறிலங்காவின் போர்க் கப்பல் மூழ்கடிப்பு; 25 கடற்படையினர் பலி; கப்பல் தளபதி கைது

## கடற் கரும்புலிகள் வீரசாதனை

[யாழ்ப்பாணம்]

கடற்கரும்புலிகளும், கடற்புலிகளும் இணைந்து நடத்திய வெற்றிகரமான தாக்குதல் ஒன்றில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான பீரங்கிகள் பொருத்தப்பட்ட "சாகரவர்த்தனா" [கடலரசன்] எனும் யுத்தக் கப்பல் நேற்று முன்தினம் இரவு மூழ்கடிக்கப்பட்டது. கற்பிட்டிக் கடற்பரப்பில், சிலாவத்துறையில் இருந்து 15 கடல்மைல் தொலைவில் இத் துணிகரத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்தது.

இவ் வெற்றிகரமான தாக்குதலின்போது 25க்கு மேற்பட்ட கடற்படையினர் கொல்லப்பட்டனர். கப்பல் தளபதி கொமாண்டர் அஜித்குமார போயாகொட உட்பட இரு அதிகாரிகள் கடற்புலிகளால் கைதுசெய்யப்பட்டனர்.

இத் தாக்குதலில் இரு பெண் கடற்கரும்புலிகள் உட்பட கடற்கரும்புலிகளைச் சேர்ந்த நான்கு பேர் வீரச்சாவடைந்தனர்.

இம் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் இருந்து இரண்டு 50 கலிபர் கனரக துப்பாக்கிகள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 11. 25 மணிக்கு இரு படகுகளில் சென்ற நான்கு கடற் கரும்புலிகள் இவ் யுத்தக் கப்பலின் மீது தாக்குதலை நடத்தினர். இதனைத் தொடர்ந்து கடற்புலிகளும் கப்பலின் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 12.30 மணிக்கு இவ்யுத்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.


இத்தாக்குதலின் போது குறைந்தது இருபத்திஐந்துக்கு மேற்பட்ட கடற்படையினர் கொல்லப்பட்டனர்.



தேசியத் தலைவர் பிரபாகரனுடன் பெண் கடற்கரும்புலி லெப்- கேணல் நளாயினி



## கப்பற் தளபதியுடன் அதிகாரியும் கைது





கப்பற் தளபதி
கொமாண்டர் அஜித்குமார

## அதிகாரியும் கைது

(யாழ்ப்பாணம்)

கற்பிட்டிக் கடலில் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட கப்பலின் தளபதியும் மற்றொரு கடற்படை அதிகாரியும் கடற்புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட கொமாண்டர் அஜித்குமாரபோயா கொட என்னும் கப்பலின் தளபதி வெளிநாட்டுப் பயிற்சி பெற்றவர். 21 வருட காலம் கடற்படையில் சேவைபுரிந்துள்ளார். இவர் 1987 இல் வடமராட்சியில் நடாத்தப்பட்ட ''ஒப்பிரேசன் லிபரேசன்'' தாக்குதலில் சிறப்பாகச் செயலாற்றியமைக்காக விருது பெற்றவராவார்,

மேலும் என். ஈ. குமாரசிங்க விசித்த என்னும் கடற்படை அதிகாரியும் புலிகளால் கைது செய்யப்பட்டார். இவர் கடற்படையில் 12 வருட சேவை புரிந்துள்ளார்

கடற்புலிகளின் மகளிர் படைப்பிரிவு விசேட தளபதி லெப். கேணல் நளாயினி இத்தாக்குதலை வெற்றிகரமாக நடத்தியதுடன் இக்கப்பலின் தளபதி கைதாவதற்கும் வழி வகுத்துக் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



தேசியத் தலைவர் பிரபாகரனுடன் பெண் கடற்கரும்புலி
மேஜர் மங்கை

# இரு பெண் கடற்கரும்புலிகள் உட்ப நான்கு கரும்புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கடற்கரும்புலிகள் நடத்திய இவ் வெற்றிகரமான தாக்குதலில், இரண்டு பெண் கடற்கரும்புலிகளும், இரண்டு கடற்கரும்புலிகளும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

★ கடற்கரும்புலி லெப் கேணல் நளாயினி (விசேட தளபதி, கடற்புலி மகளிர் படைப்பிரிவு).

ஆறுமுகசாமி பத்மாவதி, ஊறணி, வல்வெட்டித்துறை

★ கடற்கரும்புலிமேஜர்மங்கை (கடற்புலி மகளிர் படை) கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி, முள்ளியான் மிருசுவில் வடக்கு, மிருசுவில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# நான்கு பீரங்கிகள் அழிப்பு; இரு 50 கலிபர்கள் கைப்பற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட யுத்தக் கப்பலில் பொருத்தப்பட்டிருந்த 25 மி. மீ இரட்டைப் பீரங்கிகள் இரண்டு (நான்கு பீரங்கிகள்) கப்பல் மூழ்கடிக்கப்படுவதற்கு முன்பாகவே கடற்புலிகளால் நாசமாக்கப்பட்டது.

இக்கப்பலில் இருந்து இரண்டு 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கிகள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

# கப்பல் மீதான தாக்குதல் குறித்து பிரதமர் தளபதிகளுடன் ஆராய்வு

(கொழும்பு)

மன்னார் பிராந்தியத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற கடற்படை மீதான தாக்குதல் தொடர்பான தகவல் மற்றும் பூரண அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா கடற்படை தலைமை அலுவலகத்திற்கு விஜயம் செய்தார்.

அங்கு கடற்படை உயர் அதிகாரிகளுடன் அவசர மாநாடு ஒன்றை நடாத்தி தாக்குதல் குறித்து ஆராய்ந்ததுடன் கடற் படைத் தளபதியை சிலாவத்துறை கடற்படை தளத்திற்கு உடனடியாக சென்று விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பணித்தார்.

இம் மாநாட்டில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தயும் கலந்து கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கருப்புலிகளின்
உருவப்படம்
உள்ளே

கற்பிட்டியில் பாரிய கடற்படைக் கப்பலை மூழ்கடித்து வீரசாதனை படைத்த கடற் கரும்புலிகளின் உருவப்படங்களை தாங்கிய இணைப்பு இன்றைய ஈழநாதம் தினசரியுடன் வெளிவருகிறது.

# சமாதானப் பேச்சுக்கு யுத்தநிறுத்தம் அவசியத்தை வலியுறுத்தும்தாக்குதல்

[கொழும்பு]

யுத்த நிறுத்தம் ஒன்றின் மூலமே சமாதான பேச்சுவார்த்தைகளை நடத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியும் என்பதை வலியுறுத்தும் ஒரு தாக்குதலாகவே இதனை அனுமானிக்க முடிகிறது என பி. பி. ஸியின் சிங்கள சேவை தெரிவித்தது.

கற்பிட்டியில் கடற்படை கப்பல் மீதான தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டது.

சமாதான பேச்சுவார்த்தை ஒன்றுக்கான சூழ்நிலையை ஏற்படுத்த யுத்த நிறுத்தம் அவசியம் என விடுதலைப்புலிகள் கருத்து தெரிவித்தபோது அரசாங்கம் அதற்கு சாதகமான பதிலை அளிக்கவில்லை என்பதுடன் இதனை ஏற்றுக் கொள்ளக்கூட இல்லை.

எனவே இவ்வாறான தாக்குதல் யுத்த நிறுத்தத்துடனான சமாதானப் பேச்சுவார்த்தையை வலியுறுத்துகிறது என பி. பி. ஸி. தெரிவித்தது.

## வரி விளம்பரம்

**பாலர் ஆசிரியராகலாம்...**

கடைசித்தகைமை க.பொ.த. (சா/த) சனி, ஞாயிறு வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் ஆரம்பம். பாலர் ஆசிரியர் சங்கம், 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (9449)

**அலுவலக மேசை உபகரணம்**

அலுவலக மேசைக்கு எழிலூட்ட, வேலைக்கு இதமூட்ட, குண்டூசி, கிளிப்புகளுக்குரிய தனித்தனி கிண்ணங்களோடு, பென்சில், பேனை வசதியாக வைப்பதற்கு முற்றிலும் எவர்சில்வரில் வடிவமைக்கப் பெற்ற சாதனம். தனியாகவோ, மொத்தமாகவோ விற்பனைக்குள்ளது. (10372) ''மில்க்வைற்''

**நாளைய சந்ததிக்காக இன்றைய இலக்கியம்**

''ஒரு பிடி மண்'' விற்பனையாகின்றது. கே.ஆர். டேவிட் எழுதிய இம்மண்ணின் கதைகள்... மலையில் இருந்து ஒலிக்கும் மணியோசையாய் உங்களை உசுப்பும்... பூபால சிங்கம், வசந்தம் புத்தக சாலைகள், யாழ்ப்பாணம். (9471)

உ

யாழ்/வண்ணை

கலட்டி திருவருள்

மிகு கற்பக விநாயகர்

திருக்கோவில் மண்டலாபிஷேக பூர்த்தி நவோத்தர ஷகஸ்ர சங்காபிஷேக [1009]

விஞ்ஞாபனம்

காலம்:- 21-09-94 புதன்கிழமை

காலை 8 மணி முதல் 11.30 மணி வரை

12.00 மணிக்கு விஷேஷ பூஜை

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை ரமணி / தமிழினியன்**

(புருஷோத்தமன் குமார சந்திரன்

தமிழீழ சொத்தாய் 12-07-1972 — தமிழீழ வித்தாய் 21-09-1993

தமிழர்க்கினியனே தமிழினியன்
தமிழர் கோட்டையாம் நற்திருமலைதனில்
முகிழ்த் தெழுந்தெ ளிர்ந்தே பகையை ஒழித்த
கிழக்கின் விடிவன்றி தமிழீழ விடிவின்
முழக்கத் தவிலாய் முழங்கிய வேங்கை நீ
கிழக்கின் தாரகையே தமிழர்க்கினிய னேதலைவன்
வழிதவறாது நீ சென்று விழுப்புண்ணுடன் வீர
சொர்க்கத்தை கண்டாய் விடிவின் வித்தானாய்.

குடும்பத்தினர்.
நண்பர்கள்

பு. சந்திரன்,
சிவன் வீதி.
சாவகச்சேரி.

(9462)

இரு மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் மாபெரும் வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் இலக்கங்களும் பெயர்களும் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 8808 | மணிக்கூடு | செல்வி ப. செல்வநாயகம், 595 நாவலர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். |
| 2 ஆம் பரிசு | 11537 | எவர்சில்வர் பொருட்கள் (Sm) | நா. சு நடராசா அராலி வடக்கு வட்டுக்கோட்டை |
| 3 ஆம் பரிசு | 6248 | Tசேட் | சு. அம்பிகைராசா 82/4 Stanley Road Jaffna |

**ஆறுதல் பரிசுகள்**

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 6280 | குடை | V. ஞானேஸ்வரன் ஏழாலை மேற்கு, ஏழாலை. |
| 2 ஆம் பரிசு | 532 | தொப்பி/ சாப்பாட்டுப் பெட்டி | வி. காமராஜ் ஏழாலை மேற்கு, சுன்னாகம். |
| 3 ஆம் பரிசு | 7521 | அல்பம் | V. கமலாகரன் 6, யாழ்வீதி, யாழ்ப்பாணம். |
| 4 ஆம் பரிசு | 8972 | பாடசாலைப்பை | நிசாந்தன் சென்யூட் அவனியு முள்ளிவீதி, அரியாலை. |
| 5 ஆம் பரிசு | 9204 | [illegible] | [illegible] |

**வசந்தம் அரிவைத் தொழிலகம்**

கட்டடத் தேவைக்குரிய மரங்கள், மரத்தளபாடங்கள் குறித்த தவணையில் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.

வசந்தம் தேங்காய், விறகு
விற்பனை நிலையம்,
கண்டி றோட்,
அரியாலை.

(9473)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணிலே: 16-10-1969

மண்ணுக்காக: 23-8-1994

**மேஜர் சேரன்**

(ஐயாத்தம்பி குமாரேந்திரன்)

தளராத நெஞ்சோடு தன்னையே அர்ப்பணித்தாய்.
அயராத செயலோடுவேவுப்புலியானாய்,
வாட்டும் சோகத்தால் வாடுகிறோம் நாளும்
தொட்டுத் தொடருகிறோம் உன் நினைவில் என்
-நாளும்.

நாளை வியாழக்கிழமை 22-9-94 அன்று நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் மதிய போசன விருந்திலும் அனைத்துப் போராளிகளையும் மற்றையோரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வ. ஐயாத்தம்பி
எழுதுமட்டுவாழ்,
மிழுபளை.

பெற்றோர், சகோதரர்,
உறவினர்கள், நண்பர்கள்,
(9455)

## நினைவு கூருகின்றோம்.

**21-09-1994**

1986-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ் மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த,

**லெஸ்ரர்** (செபஸ்தியாம்பிள்ளை ஜெபநேசன்- நெடுங்கண்டல், அடம்பன்-மன்னார்)

1989-ம் ஆண்டு இந்தியப்படையினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து யாழ்-மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவரும்போது தேசவிரோதிகளினால் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த,

**ராசா** (பாலசுப்பிரமணியம் இரத்தினேஸ்வரன்-48-4, ஸ்ரான்லி வீதி-யாழ்ப்பாணம்)

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சர்மா** (முத்துலிங்கம் குணசீலன்-வட்டக்கச்சி-கிளிநொச்சி)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து யாழ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். சஞ்சுதா** (சிவனேஸ்வரி இராசையா -மாந்தோட்டம்-வவுனியா)

1991-ம் ஆண்டு மட்டு-காயங்கேணி முகாமிலிருந்து நாவலடி இராணுவமுகாம் நோக்கி வந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். இலக்கியன்** [குமாரசாமி கஜேந்திரன்- கொம்மாந்துறை-மட்டு)

**லெப். சஞ்சீவன் - காமினி** (குஞ்சுத்தம்பி தயாபரன்-ஆரையம்பதி-மட்டு)

**கலாகரநாதன் - கலாகரன்** (இராசலிங்கம் விஜயகுமார்-கள்ளிச்சை-மட்டு)

1993-ம் ஆண்டு திருமலை மாவட்டத்தில் கங்காணிக்குளம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**தமிழினியன் - ரமணி** (புருசோத்தமன்பிள்ளை குமாரச்சந்திரன்-திருமால்வீதி-திருமலை)

யாழ் மாவட்டத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த,

**கப்டன் கிருபன் - பிரசாந்** (டேவிட்மான் வின்சிலேமார்க்-வங்காலை-மன்னார்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10379)



## தியாகி திலீபன்

7-ம் ஆண்டு நினைவு விழா

11. 30 மணி வரை

12. 00 மணிக்கு விஷேஷ பூஜை

1. 00 மணிக்குமகேஸ்வர பூஜை
(அன்னதானம்)

மாலை 5. 00 மணி வசந்த மண்டப பூஜையும் திருவூஞ்சலும் சுவாமி வீதி வலம் வருதலும் நடைபெறும். ஷகஸ்ர சங்காபிஷேக குரு வேதாகம கிரியா மணி

சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக் குருக்கள்

நிகழ்ச்சிகள்: விஷேட மேளக்கச்சேரி இடம்பெறும்

-உபயகாரர்கள்-

(சி-10382)

---

யாழ்ப்பாணம்.

| | | | |
|---|---|---|---|
| 4 ஆம் பரிசு | 8972 | பாடசாலைப்பை | நிசாந்தன் சென்யூட் அவனியு முள்ளிவீதி, அரியாலை. |
| 5 ஆம் பரிசு | 9204 | பிளாஸ்டிக் வாளி | ஏ. தெய்வேந்திரராசா அரசடி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். |
| 6 ஆம் பரிசு | 8978 | எவர்சில்வர் பேணிகள் | நிசாந்தன் சென்யூட்அவனியு முள்ளிவீதி, அரியாலை. |
| 7 ஆம் பரிசு | 7463 | கைமணிக்கூடு | A,ராசலிங்கம் 61/2, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். |

3 ஆவது சீட்டிழுப்பு நொவெம்பர் 15ஆம் திகதி 1994 இல் நடைபெறும்இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று உங்கள் அதிர்ஷ்டத்தை பரீட்சித்துப் பாருங்கள்.

ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ் (தனி)லிமிட்டட்
14, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[சி-10381]

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
1973. 12. 07
உதிர்வு
1993. 10. 02

மலர்வு
1993.2.23
உதிர்வு
1993.10.07



செல்வன் நடராசா சிவலோகராசா

நடராசா சிவசெல்வராசா

திதி-: 21.9.94


மாமரத்து கொப்பினிலே நத்து ஒன்று கத்தியது மாணிக்கக்கல்லிரண்டு தவறிவிழு காணக்கண்டோம்... ஆமம்மா எம்மாதப் புத்திரர்கள் மாய்ந்துவிடும் அறிகுறி தானவை சிவலோகராசா என்னும் பெயர் கொண்டு சிவசெல்வராசாவாம் தம்பியையும் கொண்டு சென்று சிவன்தாள் வாழும் எம் மகனே - உம் சீவான்மா சாந்தியாய் வாழட்டுமே.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

உங்கள் துயரால் வாடும்
உற்றார், உறவினர், குடும்பத்தினர்.

(9468)

---



# 7-ம் ஆண்டு நினைவு விழா

இடம்: யாழ். ரசிக ரஞ்சன சபா மண்டபம்
(பெருமாள் கோவிலடி)
காலம்: 21- 09- 94 புதன்கிழமை மாலை 5.00 மணி

## நிகழ்ச்சி நிரல்

★ அக வணக்கம்
★ வரவேற்புரை: திரு. தி. வரதராஜர் (செயலாளர் த.க.நி- ஒன்றியம் யாழ் மாவட்டம்)
★ தலைமையுரை: திரு. இரா. செல்வவடிவேல் (தலைவர் த.க நி ஒன்றியம் யாழ் கோட்டம்]
★ சிறப்புரைகள்: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள்

## ★ கலை நிகழ்ச்சிகள் ★

1. விழிப்புலன் அற்ற இளைஞர்களின் இசை நிகழ்ச்சி
2. எழுச்சிப் பாடல்கள் (த.க, நிறுவன மாணவர்கள்)

## ★ பட்டி மண்டபம் ★

விடயம்: நாமிருக்கும் நாடு நமது என்று உணர்ந்துவிட்டோமா?
நடுவர்: திரு. M. குமாரவேல் (பிரபல பொருளியல் ஆசிரியர்)

வாதிடுபவர்கள்

| உணர்ந்துவிட்டோம் | உணர்ந்துவிடவில்லை |
|---|---|
| 'வாகீச கலாநிதி' திரு. க. நாகேஸ்வரன் | 'செஞ்சொற் செல்வன்' திரு. இரா. செல்வவடிவேல் |
| ★ செல்வன் லோ. துஷிகரன் | செல்வன் இ. செந்தூர்செல்வன் |
| ★ திரு. K.S. முத்துலிங்கம் | செல்வன் ஜெ. ஜெயகாந்தன் |

நன்றியுரை: செல்வி M. F. யோசப் (செயலாளர் த க.நி. ஒன்றியம்)
யாழ் கோட்டம்

★ தமிழீழ மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ் கோட்டம்

(சி-10380)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு..

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல் -- திருக்குறள்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 21-09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண் 05

## யுத்த நிறுத்தத்தின் அவசியம்

கடற்கரும்புலிகள் கற்பிட்டிக் கடற்பரப்பில் நடத்திய வெற்றிகரமான தாக்குதல் ஒன்றில் சிறிலங்கா போர்க் கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அறிவிப்பு விடுத்த பின்னர் இடம்பெற்ற முதலாவது தாக்குதல் என்று இல்லாதுவிட்டாலும் பெரும் தாக்குதல் என்பதில் இத்தாக்குதல் முதன்மையானதே.

கடற்புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதலானது இனப்பிரச்சினைக்கான சமாதானத்தீர்வு விடயத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதை தற்பொழுது உடன் தெளிவுபடுத்த முடியாது என்றாலும் இத்தாக்குதல் குறித்து விடுதலைப்புலிகள் தரப்பை எவரும் குறை கூறவோ அன்றி சமாதான முயற்சிக்கு புலிகள் ஏற்படுத்திய முட்டுக்கட்டை என்றோ கூறிவிட முடியாது.

ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் ஒப்புக்கொண்ட அதேவேளை போர்நிறுத்தத்தையும் அமுல்படுத்துமாறு பலதடவை அரசாங்கத்தைக் கோரியே வந்தனர். ஆனால் அரசாங்கம் இவ்விடயத்தில் ஒரு மௌனமான போக்கையே கடைப்பிடித்தது. இதேசமயம் இராணுவ நடவடிக்கைகள் எதற்கும் அது கட்டுப்பாடுகள் விதித்ததாகவும் தெரியவில்லை.

இதனை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தவின் அறிவிப்புக்களும் தெளிவாகவே உறுதிப்படுத்துகின்றன. 'படையினர் தங்களது வழமையான கடமைகளைச் செய்து வருகின்றனர். காரணம் அரசாங்கம் இது தொடர்பாக உத்தரவு ஒன்றையும் பிறப்பிக்காததேயாகும். நாம் படையினர் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த மாட்டோம்' என அவர் தெரிவித்திருந்தார்.

இதற்கு ஏற்றால் போன்றே இராணுவம் தனதுவழமையான ரோந்து நடவடிக்கைகளை மட்டுமல்ல, விடுதலைப்புலிகளின் முகாங்களின் மீதும் பொதுமக்களின் நிலைகள் மீதும் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வந்தது. இதற்கு எடுத்துக் காட்டாக கடந்த 15ஆம் திகதி மட்டக்களப்பில் இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் எட்டுப் போராளிகளும் இரண்டு ஆதரவாளர்களும் வீரச்சாவடைய வேண்டிவந்தது.

# இலங்கை செஞ்சிலுவைக்கான உதவி நோர்வேயினால் இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை செஞ்சிலுவை சங்கத்திற்கான தனது சகல உதவிகளையும் நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் இடைநிறுத்தியுள்ளது. வழங்கப்படும் உதவிகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் சீரான முறையில் கையாளப்படவில்லை எனவும், பல ஒழுங்கீனங்கள், துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் சுமார் எட்டு வேலைத் திட்டங்களுக்கான உதவிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்கி வந்தது. சர்வதேச கணக்காளர்களால் இந்த உதவிக்கான நிதி கையாளப்பட்ட விதம் குறித்து ஆராயப்பட்டபோதே இந்த ஒழுங்கீனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இது பற்றி நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் டாக்டர் லால்நயஸ் கருத்து வெளியிடுகையில், இந்த வருட முடிவுக்குள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பூரணமான அறிக்கை சமர்ப்பித்தால் இந் நிதி முற்றாக காலவதியாகாமல் தடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

தேசிய கல்வி நிறுவனத்தின்

## கல்வி டிப்ளோமா மாணவர் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்று வந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமா இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான கற்கைநெறி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டமையை ஆட்சேபித்து விரிவுரைகளை பகிஷ்கரித்து ஆசிரிய மாணவர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் யாழ். இந்துக்கல்லூரியிலும் நடைபெற்று வந்தது. இக்கல்லூரிகளில் வலயம் ஒன்று வலயம் இரண்டு ஆகியவற்றுக்குட்பட்ட ஆசிரிய மாணவர்கள் தமது பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறியை மேற்கொண்டுவந்தனர்.

இவற்றுள் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்றுவந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்பித்தல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டதாகும்.

இதனை ஆட்சேபித்தே யாழ். இந்து மகளிர் கல்வி நிலைய தேசிய கல்வி நிறுவன பட்டப்பின் கல்வி டிப்ளோமா இரண்டாம் வருட ஆசிரிய மாணவர் அமைப்பு கடந்த சனிக்கிழமை முதல் வகுப்புகளை பகிஷ்கரித்து வருகின்றது.

## தகுதியிருந்தும் அனுமதி கிட்டாதோர் முறையிடலாம்

(கொழும்பு)

1993/94-ம் கல்வியாண்டில் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறக்கூடிய தகுதியிருந்தும் அனுமதி கிடைக்காதவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின், விசேட குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய தகுதியில்லாமல் எவராவது பல்கலைக் கழகங்களில் அனுமதி பெற்றிருந்தால் அது பற்றியும் விசேட குழுவுக்கு அறிவிக்கலாம்.

தகுதியிருந்தும் பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களுக்கு அனுமதி பெற்றுக் கொடுப்பதுடன், பல்கலைக் கழகங்களுக்கிடையிலான இடமாற்றங்களும் பெற்றுக் கொடுக்கப்படும். எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தாம் தெரிவு செய்த கற்கைத் துறைக்கல்லாமல், வேறு துறைகளுக்கு சேர்க்கப்பட்ட மாணவர்களும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

மேன்முறையீடு சம்பந்தமான விண்ணப்பங்கள், பல்கலைக்கழக அனுமதி விசேட குழுச் செயலாளர், பல்கலைக் கழகமானிய ஆணைக்குழு, 20 வார்ட் பிளேஸ், கொழும்பு 7 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

## தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினை

தென்மராட்சிக் கோட்டத்தில் கைதடி வட்டத்தில். கைதடிச் சந்தியில் அப்பா

## இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

இளம் குடும்பப் பெண்ணொருவர் தீமூட்டி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று முன் தினம் மாட்டின் வீதியில் இடம் பெற்றது. இச்சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தாயான கு. இரத்தினேஸ்வரி என்ற பெண்ணே இவ்வாறு தன்னைத் தானே தீமூட்டி மடிந்தவர் ஆவார். வாழ்வில் விரக்தியுற்று மனமுடைந்த இவர் மண்ணெய் ஊற்றி தீ மூட்டியதால் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்- போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானதாக கூறப்படுகிறது. (22)

## உருவப்படம் திரைநீக்கம்

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் 22-05-94 அன்றுவிமானக் குண்டுத் தாக்குதலால் அகால மரணமடைந்த ஞாபகார்த்தமாக அவரது உருவப்படம் திரைநீக்கம் செய்யும் வைபவம் நாளை வியாழக் கிழமை நீர்வேலி மத்தி ஐங்கரன் கிளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## தொற்று நோய் பரவும் ஆபத்து

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் மீண்டும் தொற்று நோய்கள் பரவும் ஆபத்து தோன்றியுள்ளதாக தெரிய வருகிறது. குடியிருப்பு வாசிகளில் பெரும்பாலானோரி

## சிந்து பாடிய பூங்குயில்

திலீபன் என்றொரு தியாக நெருப்பு
தீந்தமிழர்க்கு இவன் மேல் எத்தனை விருப்பு
ஐந்து அம்சக்கோரிக்கை காட்டியே
அகிம்சை வழிக்கு புதுத் தத்துவம் சொன்னவன்
சிந்து பாடிய இந்தப் பூங்குயில் — தமிழர்
சிறுமை கண்டு கொதித்தெழுந்தது
வெந்துபோன தமிழருக்காகவே
இந்த வீணை நரம்புகள் அறுந்து போனது
காந்தியப் போர்வையில் வந்த இந்தியன்
கரங்களிலே இவன் கத்தியைக் கண்டவன்
ஏந்திய ஆயுதம் எம்மை அழிக்குமென எடுத்துச்சொன்
— னவன்

முந்தியிங்கு வந்தவரெல்லாம்
முழுதாய் எம்மை அடிமை கொண்டனர்
இந்த நிலையை மாற்றியமைத்து
ஏற்றிட வேண்டும் புலிக்கொடியென்றவன்!

- வேலணையூர் பாக்கியன்

## திலீபன் உன்னைத் தொடர்ந்து….

திலீபன்

நீ உயிரோடு இருக்கும் போதே
உனக்கு இரங்கல் கூட்டம் நடந்தது.
உன்னை வளைத்து மக்கள் கடல்.
எங்களை விட்டுப் போகிறாய்.
எங்கே அண்ணா போகிறாய்?
ஒரு கவிதை
நீ உயிரோடு உட்கார்ந்திருந்த
மேடையில் ஒலிக்கிறது.
நீ சிரிக்கிறாய்
மக்கள் அழுகிறார்கள்
திலீபன் ………
நீ உயிரோடு இருக்கும் போதே
உன் இரங்கல் கூட்டம் நடந்தது.
உலகத்தின் கண்களைத் திறக்க - நீ
உன் கண்களை மூடினாய்.
திலீபன் …… உன் தியாகம்
எதிரிகள் முன் ஓயாத புயலாய்
என்றைக்கும் வீசும்.
நீ உன் சாவினால் வளர்த்த
நெருப்புத்தானே இன்று
பாரதப் படையை நீறாக்கிக் கொண்டிருக்கிறது:
இந்தியப் படை
விடுதலைப்புலிகளைக்கைதுசெய்யும்போது பாய்ந்து
''சயனைட்'' இருக்கிறதா என்று பார்த்து
இருந்தால் பறித்து எடுக்கிறதாம்.
''சயனைட்'' சாப்பிட்டால் தான்
சாவு வருமா? - சாப்பிடாமல் இருந்தே
எங்களுக்கு சாகத் தெரியும் என்று
நீ அவர்களுக்கு சவால் விட்டாய்;
பிரபாகரன் வளர்த்த புலியே!
உன் பின்னால் எத்தனை பேர்
எத்தனை பேர் நீ போன இடத்துக்கு
வந்து விட்டார்கள் பார் ……
நீ ஒரு நீரோட்டம் - உன்னோடு
ஒரு தலைமுறையே இழுபட்டு வரும்.
உன் உண்ணாவிரதத்தின் பின்பு
தமிழீழத்துப் பெண்கள்
தியாகம் செய்வதற்காகவே

மட்டக்களப்பில் இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் எட்டுப் போராளிகளும் இரண்டு ஆதரவாளர்களும் வீரச்சாவடைய வேண்டி வந்தது-

இது சமாதான முயற்சியில் அக்கறை காட்டுவதாகக் கூறும் அரசாங்கம் இராணுவத்தினரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராததின் விளைவே ஆகும் ஒரு வகையில் இதனை இராணுவத்தின் அழுத்தம் தொடர்ந்து இருப்பதை அரசாங்கமும் விரும்புவதாகவும் கொள்ள முடியும்:

ஏனெனில் பெரும் தாக்குதல்களை நடத்தாது விட்டாலும். சிறு சிறு தாக்குதல்களை தொடர்ச்சியாகச் செய்வதன் மூலம் சமாதான காலத்திற்குள்ளேயே பெருமளவு புலிகளைக் கொன்றுவிடலாம்- பலவீனப்படுத்திவிடலாம் என்பது திட்டமாக இருக்கக் கூடும். இந்நிலையில் புலிகள் சமாதானமென்ற ரீதியில் தாக்குதல்களைத் தவிர்ப்பின் பெருமளவில் பலவீனப்படுவது தவிர்க்க முடியாது போகலாம்.

இதனால் தான் விடுதலைப்புலிகள் சிறிலங்கா ஆயுதப்படையினர் மீது தாக்குதல்களை நடத்துவது, அதாவது வழமை போல் விடுதலைப்புலிகள் தாக்குதல்களை மேற்கொள்வது தவிர்க்க முடியாது போகின்றது தெளிவாகக் கூறுவதானால், சிறிலங்கா இராணுவத்தின் வழமையான நடவடிக்கை போன்றே விடுதலைப் புலிகளின் வழமையான நடவடிக்கையும் இது வென்றே கூறலாம்.

ஆனால் இத்தாக்குதல் நல்லெண்ண சமாதானசூழ் நிலையைப் பாதிக்கும் எனக் கூறப்படுமானால் அதனை எவ்வாறு முற்றாக நிராகரிக்க முடியாதோ, அதைப் போன்றே சிறிலங்கா அரசாங்கத்தினதும், இராணுவத்தினதும் நடவடிக்கைகளே இதறகுக் காரணம் என்பதையும், எதுவித காரணமும் கொண்டு எவரும் மறுக்க முடியாது.

இதற்காகவே விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுக்கள் ஒரு சுமுகமான முறையில் இடம்பெற வேண்டும் என்றும், அதற்கு யுத்த நிறுத்தம் அவசியம் என்பதையும் தொடர்ந்து வற்புறுத்தியே வந்தது. இதற்காகவே தலைவர் பிரபாகரன் பி.பி. ஸிக்கு அளித்த பேட்டியில் கூட யுத்தநிறுத்தத்தின் அவசியத்தை தெளிவாகவே வற்புறுத்தியிருந்தார்,

இந்தவகையில் இனியாவது பேச்சுவார்த்தை, சமாதானத்தீர்வு என்பனவற்றிற்கு யுத்தநிறுத்தத்தின் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டும். இல்லாதுபோனால், சமாதான முயற்சிகளின் போது இவ்வாறான நெருக்கடிகள் தலைதூக்குவது தவிர்க்க முடியாதவையாகவே போகும். இதையிட்டு அரசாங்கம் எவரையும் குறை கூறுதல் முடியாது.

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவாக வட்டாரீதியாக உண்ணாவிரத நிகழ்வுகள் இன்று யாழ் குடாநாடெங்கும் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வுகளில் வலிகாமம் கோட்டத்தில் உடுவில் வட்டத்தில் சுண்ணாகம் சிவன் கோயிலடியில், உடுவில் தெ. ப பொ. கூ. சங்கம், ஆலடி சிந்து சனசமூக நிலையம், தமிழ்மொழி ச. ச. நிலையம், அம்பாள் ச. ச. நிலையமும், சங்கானை வட்டத்தில், வடக்கம்பரை அம்மன் கோயிலடியில், சங்கானை சிற்றூர் மக்களும், சண்டிலிப்பாய் வட்டத்தில் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோயிலடியில், மானிப்பாய் சிற்றூர் மக்களும், கோப்பாய் வட்டத்தில் நீர்வேலி கந்தசாமி கோவில் முன்றலில், சிறுப்பிட்டி இ. த. க. பாடசாலை, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, ஆவரங்கால் நடராஜா ராமலிங்க வித்தியாலயம், மகாஜனா வித்தியாலயம், மாதர் சங்கம், சிறுப்பிட்டி உற்பத்திக்குழு, ச ச. நிலையங்களும், யாழ்/நல்லூர் வட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை, கூட்டுறவுக் கல்லூரி பாடசாலைகள் என்பனவும் கலந்துகொள்ளும்.

வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை வட்டத்தில் மந்திகை அம்மன் கோவிலடியில், பருத்தித்துறை காணிக்கந்தோரும், கரவெட்டிவட்டத்தில், துன்னாலை கலிகைக் கந்தசாமி கோவிலடியில் சின்னத்தம்பி வித்தியாலயமும். நெல்லியடி மத்திய மகளிர் கல்லூரியும், உடுப்பிட்டி வட்டத்தில் நாவலடி வைரவர் கோவிலடியில், விவேகானந்தா ச. ச. நிலையம் விபுலானந்தா ச ச. நிலையம், அண்ணா சிலையடி வள்ளுவர் ச. ச. நிலையம், கரணவாய் மகாவித்தியாலயம், அறிவாலயம் என்பனவும் கலந்து கொள்ளும்.

தென்மராட்சிக் கோட்டத்தில் கைதடி வட்டத்தில். கைதடிச் சந்தியில் அப்பா குடியேற்றத்திட்ட மக்கள், வளர்மதி ச. ச. நிலையம் என்பனவும், சாவகச்சேரி வட்டத்தில் மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில் கல்வயல் நுணாவில், சாவகச்சேரி நகர், சிகை அலங்கரிப்பாளர் சங்கமும், கொடிகாமம் வட்டத்தில், 190 ஆம் கட்டை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் சிறிகணேசா, இளஞ்செல்வன், கிளாலி கடல் தொழிலாளர். சங்கம், விக்ரம், ஜாகீர், கெற்பேலி ச. ச. நிலையங்களும், பளை வட்டத்தில், இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியில், புலோப்பளை கிழக்கு, அல்லிப்பளை மக்களும் கலந்து கொள்வர்.

தீவகக் கோட்டத்தில் அரியாலை நாச்சிமார் கோவிலடியில் வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயமும், சத்தியக்காடு குடியிருப்பும் கலந்து கொள்ளும்.

கடற்புலிகள்பிரதேசங்களில் பாசையூர் புனித அந்தோனியார் ஆலய முன்றலிலும், உடுத்துறையிலும் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம் பெறும்.

## பரிசளிப்பு விழா

[உடுவில்]

உடுவில் மகளிர் கல்லூரியின் 93/94 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா இன்று மாலை 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் செல்வி செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக கலாநிதி சபா. ஜெயராசா அவர்களும் அவரது பாரியாரும் கலந்து கொள்கின்றனர்.

நோய்கள் பரவும் ஆபத்து தோன்றியுள்ளதாக தெரிய வருகிறது. குடியிருப்பு வாசிகளில் பெரும்பாலானோரிடையே காய்ச்சல் பரவியுள்ளது. சிலரிடையே மலேரியாவும், ஒரு சிலரிடையே செப்ரிசீமியா, மூளை மலேரியா என்பனவும் பரவியுள்ளதாகக் கூறப்படுகிறது. பிரஸ்தாபக் குடியிருப்பில் தொற்று நோய்களினால் இதுவரை பல உயிர்கள் பலியெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(22)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994 . 09 . 21 புதன் இரவு

8.01-தியாக தீபம் லெப்ரினன்ட் கேணல்,திலீபன்ன் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - ஜெராட் எழுதிய ''புயலிடம் நீதிகேட்ட பூங்காற்று''

8.20 ஏர்முனை - நிகழ்ச்சியில் ''நீர் முகாமைத்துவம்'' குறுநாடகம்

8.30-செய்திகள்

8.40-நாடகம் -செந்தமிழ்க்கீரன் எழுதிய ''தண்ணீர்''

### 1994. 09. 22 வியாழன் காலை

7.02-மாவீரவணக்கம்

7.15-விடுதலை கீதங்கள்

7.30-செய்திகள்

7.35-பத்திரிகைச் செய்திகள்

7.40-தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல். திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி- சி.கண்ணம்மா எழுதிய ''கீழ் வானில் எழுந்த கதிர்''

உன் உண்ணாவிரதத்தின் பின்பு
தமிழீழத்துப் பெண்கள்
தியாகம் செய்வதற்காகவே
பிள்ளைகளைப் பெறுகிறார்கள்.
மேடையில் தமிழீழத்திற்காக
சாவேன் என்று பேசியவன் இருக்கிறான்.
நீ - மேடையில்
தமிழீழத்திற்காகவே மரணித்தாய்.
உன் முடிவினால்
தமிழீழம் புத்துயிர் பெற்றது.
விடுதலை எத்தனை பெரியது என்பதற்கு
உன் மரணம் ஒரு விளக்கம்.

திலீபன்

நீ தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்
தொடர் சக்தி.
எல்லாம் முடிந்து விட்டது என்றே
பலரும் ஓய்ந்திருந்த நேரத்தில்,
ஒன்றும் முடிந்து விடவில்லை
என்று காட்டிய வெளிச்சம்.
அமைதியான காலம்
ஒரு விடுதலைப்போராட்ட காலத்தில் இல்லை
- என்பதை
நீ அமைதியான உன் சாவினால் நிருபித்தாய்.
இந்தியா உணவுப்பொட்டலம் போட்ட காலத்தில்
உண்ணாவிரதம் இருந்த உன் சாவு.
எங்கள் விடுதலைப்பசிக்கு என்றைக்கும் உணவாகும்
எவ்வளவு பெரிய ஆற்றலையும்
நிமிர்ந்து மோதும் பெரிய சக்தி
உன்னால் எங்களுக்கு தரப்பட்டது.
நாங்கள் பயன்படுத்துகிறோம்
இந்தியப் போர் விமானங்கள்
புலிகளை அழிக்க முடியாமல்
வெட்கத்தோடு இங்கே தரையிறங்குகின்றன.


திலீபன்

உன் இலட்சியத்திற்கு
உன் மரணத்தின் பின்னும்
வெற்றி தேடித் தருகிறாய்.
உன்னை நாங்கள் பின்பற்றுவோம்
தமிழீழ மண்ணில் எதிரிகளின்
இரும்புச் செருப்பின் ஓசை
கேட்கும் போதெல்லாம் ......
இளைஞர்களை போருக்கு அழைக்கும்
விடுதலைப்புலிகளின் துண்டறிக்கைகள்
காற்றில் பறக்கும் போதெல்லாம் ...
நெடிய பனை மரங்களின் கீழ்
உட்கார்ந்து எமது விடுதலை பற்றி
நாங்கள் பேசும் போதெல்லாம்
நாங்கள் உன்னை நினைப்போம்
நாங்கள் நீ ஆவோம்.

- நன்றி: தமிழீழம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
... நிலை நூலகம்.

# மூழ்கடிக்கப்பட்ட 'கடலரசன்'



கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட 'சாகர வர்த்தனா' (கடலரசன்) போர்க்கப்பல், சிறிலங்காவின் பயன்பாட்டிலுள்ள வீரையா போர்க்கப்பலைவிட இரண்டுமடங்கிற்கு மேற்பட்ட எடைகொண்ட கப்பலாகும்.

இக்கப்பல் பற்றிய மேலதிக விபரங்கள் வருமாறு:


பெயர்; சாகர வர்த்தனா 602 p
நிறை: 330 தொன்
நீளம்: 130½ அடி
அகலம்: 23 அடி
இயந்திர சக்தி: 2180 குதிரைவலு
வேகம்: மணிக்கு 15கடல்மைல், 3000கடல் மைலை, மணிக்கு 11 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியது.

ஆயுத விபரம்: 25மி மீ இரட்டைப் பீரங்கிகள் இரண்டு (4பீரங்கிகள்), 50 கலிபர் இயந்திரத்துப்பாக்கிகள் - இரண்டு
நான்கு அதிகாரிகள் 52 கடற்படையினரை தன்னகத்தே கொண்டது.

# தலைவருடன் கடற்கரும்புலிகள்



தேசியத்தலைவர் பிரபாகரனுடன் கடற்கரும்புலி கப்டன் லக்ஸ்மன்



தேசியத் தலைவர் பிரபாகரனுடன் கடற்கரும்புலி கப்டன் வாமன்

# தாக்குதல் நடத்தியவர்கள் மீது திருப்பித்தாக்க முடியவில்லை

## பிரிகேடியர் குலதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

கடற்படையின் போர்க் கப்பலான சாகரவர்த்தனாவில் பெரிய வெடிப்பு ஏற்பட்டதையடுத்து அக்கப்பலில் இருந்து கடற்படையினரால் தாக்குதல் நடத்தியவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்த முடியாது போனது. கப்பலும் சிறிது சிறிதாக மூழ்க ஆரம்பித்துவிட்டது என நடவடிக்கைகள் பணியகத்தின் அதிகாரி பிரிகேடியர் ஜி. ஏ. குலதுங்க தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக நடவடிக்கைகள் பணியகத்தில் நடைபெற்ற மாநாட்டில் அவர் இக்கருத்தை வெளியிட்டார். கப்பல்மீது விடுதலைப் புலிகளின் வெடிமருந்து நிரம்பிய படகுகள் மோதியதால் ஏற்பட்ட வெடிப்பதிர்வு கடற்படையினரை செயலிழக்க வைத்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான தகவல் கிடைக்கப்பெற்றதும் உலங்குவானூர்தியின் உதவியுடன் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் இதற்கு உதவியாக கற்பிட்டி, தலைமன்னார் கடற்படை தளங்களிலிருந்து மேலதிக கடற்படை படகுகள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வரவழைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்

## மாணவர் அரங்கு நாளை வரும்

இன்று மாணவர் அரங்கு வெளிவரவில்லை என்பதை வாசகர்களுக்கு வருத்தத்துடன் அறியத் தருகிறோம். நாளை மாணவர் அரங்கு வெளிவரும்.

# சரியான வழியில் சிந்திப்போருக்கு சமாதானமே தேவையாயுள்ளது

(கொழும்பு)

சரியான வழியில் சிந்திக்கும் எவரும் இராணுவ தரப்பானாலும் சரி சமாதானமே தேவையாகவுள்ளது இத

அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

இராணுவம் போர் நிறுத்தத்தை விரும்புகிறதா என பி.பி.ஸி செய்தியாளர் கேட்டதற்கு பதிலளிக்கையிலேயே பிரிகேடியர் மேற்கண்டவாறு

ணுவம் புலிகளுடன் பேசுவதை இச்சம்பவம் காரணமாக எதிர்ப்பார்களா என்று கேட்டபோது, நாம் முழு நிலைமையை கவனத்தில் கொள்ள வேண்டும். சமாதானப் பேச்சை தொடருவது

# தாக்குதல் குறித்து கருத்துக்கூற ஜனாதிபதி விரும்பவில்லையாம்

## ஏழு சடலங்கள் இதுவரை மீட்பு

(கொழும்பு)

# ஜனாதிபதி விரும்பவில்லையாம்

(கொழும்பு)

மன்னாரில் கடற்படைக் கப்பல் தாக்கப்பட்டமை குறித்து ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான டி பி. விஜேதுங்கா கருத்து எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடற்படைக் கப்பல் மீது தாக்குதல் நடைபெற்ற தகவல் கிடைத்த பின்னர் பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி விஜயம் செய்தார். எனினும் இதுகுறித்து எந்தவொரு நடவடிக்கையிலும் அவர் ஈடுபடவில்லை என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## இதுவரை மீட்பு

(கொழும்பு)

கற்பிட்டி கடலில் தகர்க்கப்பட்டகடற்படைக்கப்பலில் பலியான கடற்படையினரின் 7 சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

...பானாலும் சரி சமாதானமே தேவையாகவுள்ளது இதனால் சமாதானத்திற்கான எந்த நடவடிக்கையும் படையினரால் வரவேற்கப்படும். ஏனெனில் அவர்களுக்கு போர் பற்றி நன்கு தெரியும் இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெமுனு குலதுங்கா பி. பி. ஸிக்கு நேற்று பி.பி.ஸி செய்தியாளர் கேட்டதற்கு பதிலளிக்கையிலேயே பிரிகேடியர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கற்பிட்டி சம்பவம் சமாதான முயற்சிகளுக்கு ஊறுவிளைவிக்குமா என்று கேட்டபோது தனிப்பட்ட ரீதியில் நாம் அப்படி கருதவில்லை என்றார் இராணுவம் நிலைமையை கவனத்தில் கொள்ள வேண்டும். சமாதானப் பேச்சை தொடருவதா இல்லையா என்பதை அரசியலாளர்களே தீர்மானிக்க வேண்டுமேயொழிய இராணுவ தரப்பல்ல என்றார் பிரிகேடியர் குலதுங்க.

# விடுதலைப் புலிகள் தங்கள் பலத்தை மீண்டும் நிரூபித்துள்ளனர்

கற்பிட்டி கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானசிறிலங்கா கடற்படையினரின் கப்பல் மூழ்கிக் கொண்டிருப்பதாக பி.பி.சி.யின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டிகூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், விடுதலைப் புலிகளின் இரு படகுகளால் வழி மறிக்கப்பட்ட இக்கப்பல் வெடி மருந்துகளால் தகர்க்கப்பட்டது எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற முதலாவது பெரிய தாக்குதல் இது எனவும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என இருதரப்பும் அறிவித்த சூழ்நிலையில் இத்தாக்குதல்இடம் பெற்றிருக்கிறதுஎனவும்அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுவதற்கு முன்பாக விடுதலைப்புலிகள் போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள போதும் கூட இராணுவத்தினர் அதை விரும்புவதாக இல்லை. ஏனெனில் இராணுவ ரீதியில் புலிகள் பலவீனப்பட்டிருப்பதாக ஒரு கருத்து நிலவியது. ஆனால் இத்தாக்குதலின் மூலம் விடுதலைப் புலிகள் தமது பலத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த வகையான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் ஏற்கனவே மேற்கொண்டுள்ளனர். கடலைப் பயன் படுத்தும் வசதிகொண்ட போராட்ட அணிகளில் விடுதலைப் புலிகள் முதன்மையானவர்கள். இராணுவத்தின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் பொருட்களை எடுத்துச் செல்லும் படகுகளும் பலமுறை தாக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

# கடற்படைத் தளபதி மன்னார் விரைவு

கற்பிட்டியில் போர்க் கப்பல் மூழ்கடிப்பு தொடர்பான சம்பவத்தை விசாரிக்கும் பொருட்டு கடற்படை தளபதி மன்னார் சென்றுள்ளார் எனவும் இது தொடர்பான அவரின் பூரண அறிக்கையை எதிர் பார்த்துள்ளோம் எனவும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்,

தாக்குதல் தொடர்பான பூர்வாங்க அறிக்கையை கடற்படை தளபதி சமர்ப்பிக்கும் வரை மேலதிக தகவல் எதையும் தம்மால் தர முடியாது எனவும் அவர் கூறினார்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பான பூரண விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக சிறிலங்கா வானொலி தெரிவித்தது.

## 43 கடற் படையினரில் 16 பேர் மீட்கப்பட்டனர்

(கொழும்பு)

கற்பிட்டி கடலில் கடற்படைக் கப்பல் தகர்க்கப்பட்டபோது 43 கடற்படையினர் அக்கப்பலில் இருந்ததாகவும் இவர்களில் 16பேர் பின்னர் கடலில் இருந்து மீட்கப்பட்டதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கப்பலில் இருந்தவர்களைத் தேடும்பணி தொடர்வதாகவும் இதில் கடற்படையினரும் விமானப்படையினரும் ஈடுபட்டு வருவதாகவும் மேலும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இரு பெண்

★ கடற்கரும்புலி கப்டன் லக்ஸ்மன்[இசைவாணன்] குகதாசன் பிரணவன், 10, முதலியார் ஒழுங்கை நல்லூர், தெற்கு. யாழ்ப்பாணம்.

★ கடற்கரும்புலி கப்டன் வாமன். [தூயமணி] கந்தசாமி ரவிநாயகம், . மட்டக்களப்பு.

வீரச்சாவடைந்த போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# கடற்படை தாக்குதலில் இருமீனவர்பலி மாமுனைக் கடற்பகுதியில் சம்பவம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மாமுனைக் கடற்பகுதியில் வைத்து சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு மீனவர்கள் ஸ்தலத்தில் பலியாகினர்.

ஆழியவளையைச் சேர்ந்த பொன்னையா குணம் (வயது 23), அதே இடத்தைச் சேர்ந்த இளையதம்பி ராசா (வயது 35) ஆகியோரே கடற்படையினரின் சூட்டுக்கு இலக்காகி பலியானவர்களாவர். இவர்களது சடலமும் கடலில் கைவிடப்பட்டது. இவர்களுடன் சென்ற மற்றொருவர் நீந்திக் கரைக்கு வந்து சேர்ந்தார்.

மேலும் இவர்களது கட்டு மரங்களும் கடலில் கைவிடப்பட்டன. இதனையடுத்து மற்றைய மீனவர்களும் கடலில் குதித்து கரைக்கு வந்து சேர்ந்தனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 4-00 மணிக்கு நடைபெற்றது மேலும் காலை 7-00 மணியளவில்வடமராட்சி வடக்கு, தொண்டமனாறு கடற்பகுதியிலும் கடும் பீரங்கித் தாக்குதல்கள்நடைபெற்றன.

(யோ

## மாவின்

அட்டைக்கு மூன்று லீற்றர் வீதம் விநியோகிக்கப்படவுள்ளது.

இந்த மண்ணெண்ணையை மக்களுக்கு 23-00 ரூபா வீதம் (அதியுச்ச விலை) விற்பனை செய்ய வேண்டும் என புனர் வாழ்வுப் பகுதியினர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்துள்ளனர்.

இது 18ஆவது சுற்று மண்ணெண்ணெய் என்பது குறிப்பிடத்தக்கது. (தி, 88, சி)

## பாராளுமன்றம் ஒத்திவைப்பு

கடற்படைக் கப்பல் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று சிறிலங்கா பாராளுமன்ற நிகழ்ச்சிகள் 10 நிமிட நேரம் மட்டுமே நடைபெற்றதாக தெரியவருகிறது. இதனையடுத்து ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றம் இன்று காலை மீண்டும் கூடவுள்ளது.

## மரண அறிவித்தல்

## இளையதம்பி வேலுப்பிள்ளை

[கொடிகாமம்]

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்டவருமான இளையதம்பி வேலுப்பிள்ளை அவர்கள் 18-09-94 அன்று காலமாகிவிட்டார். அன்னார் சின்னாச்சியின் அன்புக் கணவரும், தியாகராசா (அதிபர், கொக்கிளாய் அ. த. க. பாடசாலை), பரமநாதன் (டாக்டர், லண்டன்), கிருஸ்ணபிள்ளை (ஓமான்), சிவக்கொழுந்து (நீர்வேலி), இராசலட்சுமி (கிராமசேவை உத்தியோகத்தர், புளியம்பொக்கணை), சிவமணி (ஆசிரியர், பிரான்ஸ்), பாக்கியம் (உசன்), புஸ்பநாதன் (ஓமான்) ஆகியோரின் தந்தையாரும், மனோன்மணி, ஜெகாந்திராதேவி, ஆனந்தன் தனகேஸ்வரி, சிவராசா, சுப்பிரமணியம், இரவீந்திரன், திலகவதி ஆகியோரின் மாமனாரும், சுபாஜினி, சுதாஜினி, சுதன், சுபாஸ், ஜெதீசன், ஜெயரூபி, மகாத்மன், வைகுந்தன், பகவதன், பிரதீப், பிரதீபா, பிரடினா, நிறோஜன், நிமலன், சங்கீத்மன், சங்கீத்தனா, கௌதமன், கார்த்திகா, கீர்த்திகா, தர்சிகா, சுவிதா, கிசாந், கௌதமி, கௌதமன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் தகனக்கிரியை கொடிகாமம் கட்டப்பறித்தான் மயானத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

தகவல்:
வே. சின்னாச்சி
(மனைவி)

(9476)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டுசெப்ரெம்பர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.